முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.08.2024) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறையின் அமைச்சுப்பணியில் உதவியாளர் பணியிடத்திற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட 172 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.8.2024) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலமாக மருந்தாளுநர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 946 நபர்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக உதவியாளர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 523 நபர்கள் மற்றும் தொழில் வழிகாட்டி ஆலோசகர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 5 நபர்கள், என மொத்தம் 1474 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 7 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா:

'தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர்!' குறும்பட - சுருள்படப் போட்டி!

விண்ணப்பிக்க கால அவகாசம் நீட்டிப்பு: தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஆக.21- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை கொண்டாடும் வகையில் "தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர்" எனும் குழுவின் சார்பில் குறும்பட போட்டி (Short film Competition) மற்றும் சுருள்பட போட்டி (Reels Competition)க்கான கால அவகாசம் நீட்டிக்கப் படுவதாக தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள் தொடர்பாக தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர் எனும் குழுவின் சார்பில் குறும்படபோட்டி (Short film Competition) மற்றும் சுருள்படபோட்டி (Reels Competition) நடத்துவது தொடர்பான செய்தி வெளியீடு 31.10.2023 அன்று வெளியிடப்பட்டது.

அச்செய்தி வெளியீட்டில் இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்களுடன் கூடிய குறும்படங்கள் மற்றும் சுருள்படங்களை அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து இப்போட்டிகளுக்கான கால அவகாசம் 15.01.2024 வரை நீட்டிக்கப்பட்டது.

அதனடிப்படையில் குறும்படங்கள் மற்றும் சுருள் படங்கள் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளன. இதனை பார்வையிட்ட குழு, மேற்கூறிய தலைப்பில் குறும்படங்கள் மற்றும் சுருள்படங்கள், ஆகியவற்றை சமர்ப்பிக்க மேலும் கால அவகாசம் வழங்க முடிவு செய்துள்ளது.

இப்போட்டிக்களுக்காக ஏற்கனவே குறும்படங்கள் மற்றும் சுருள் படங்களை அனுப்பிய போட்டியாளர்கள் அப்படங்களை மீண்டும் அனுப்ப தேவையில்லை. புதியதாக கலந்து கொள்ள விருப்பமுள்ள வர்கள் இணைக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறி முறைகளை பின்பற்றி தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர் (உதாரணமாக சமூக நீதி, கல்வியில் புரட்சி, சுகாதார துறையில் புரட்சி, தொழிற்துறை மேம்பாடு, மாநில அரசின் உரிமை, பெண்கள் முன்னேற்றம், கிராமப்புற / நகர்ப்புற வளர்ச்சி) என்ற தலைப்பில் குறும்படங்களை (Short film) (அதிகபட்சம் 10 நிமிடங்கள்) உருவாக்கி அதனை விண்ணப்பங்களுடன் 31.08.2024 தேதிக்குள் (shortfilmkalaignar100@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இதேபோல் சுருள்பட போட்டியில் (Reels) கலந்து கொள்ள விருப்பமுள்ள வர்கள் தொலைநோக்குச் சிந்தனையாளர்கலைஞர் எனும் தலைப்பில் புதிய சுருள்படங்களை 30 வினாடிகள் முதல் 1 நிமிடம் வரை இருக்கும் வகையில் உருவாக்கி விண்ணப்பங்களுடன் 31.08.2024 தேதிக்குள் (reelskalaignar100@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

குறும்பட போட்டி (Short film Competition) மற்றும் சுருள்பட போட்டி (Reels Competition)களுக்கான வழிகாட்டி நெறிமுறைகளை https://dipr.tn.gov.in (செய்தி வெளியீடு (Press release) எண்.2179, நாள்:31.10.2023) என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திராவிட மாடல் அரசைத் திறம்பட நடத்திவரும்

முதல்வரின் மக்கள்நலத் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்போம்!

திண்டுக்கல் மேற்கு - கிழக்கு மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

திண்டுக்கல், ஆக.21- திண்டுக்கல் கிழக்கு, மேற்கு மாவட்ட கழகத்தின். செயற்குழு கூட்டம் திண்டுக்கல்லில் நடைபெற்றது. கூட்டத்துக்கு அவைத்தலைவர்கள் மோகன், காமாட்சி ஆகியோர் தலைமை தாங்கினர். கிழக்கு மாவட்ட செயலாளர் இ.பெ.செந்தில்குமார்சிறப்புரை ஆற்றினார். கழக துணைப் பொதுச் செயலாளரும் ஊரகவளர்ச்சித்துறை அமைச்சருமான இ.பெரியசாமி, மேற்கு மாவட்ட செயலாளரும் உணவுத் துறை அமைச்சருமான அர. சக்கரபாணி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

அமைச்சர் இ.பெரியசாமி பேசுகையில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை ஒவ்வொரு உடன்பிறப்பும் உள்ளன்புடன் கொண்டாடி மகிழ்ந்த நிலையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில் தலைவர் கலைஞர் கட்டிக்காத்த இயக்கமாம் தி.மு.க. வின் பவள விழா ஆண்டு நிறைவினை கழகம் தொடங்கப்பட்ட நாளான செப்டம்பர் 17 அன்று கொண்டாடி மகிழ இருப்பதால் இந்த முக்கால் நூற்றாண்டு அரசியல் வரலாற்றில் தி.மு. கழகம் படைத்த சாதனைகள் கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட மகத்தான திட்டங்கள், திராவிட மாடல் அரசைத் திறம்பட நடத்திவரும் முதலமைச்சர் அவர்களின் மக்கள்நலத் திட்டங்கள் ஆகியவற்றை விளக்கி சுவர் விளம்பரங்கள் எழுதப்படுவதுடன் தமிழ்நாடு முழுவதும் தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள் நடத்தி, மக்களிடம் கழகத்தின் சாதனைகளை எடுத்துக் கூற வேண்டும்.

நாடாளுமன்ற தேர்தலில் சிறப்பாக பணியாற்றிய கட்சி நிர்வாகிகள், தொண்டர்களுக்கு நன்றி. இதேபோன்று அடுத்து நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலிலும் சிறப்பாக பணியாற்றி, திண்டுக்கல் மாவட்டத்தில் 7 சட்டமன்ற தொகுதிகளையும் நாம் கைப்பற்ற வேண்டும். அதற்காக நாம் கடுமையாக உழைத்து தலைவருக்கு வெற்றியை தர வேண்டும். அனைவரையும் அரவணைத்தும், புதியவர்களை வரவேற்று இணைந்து பணியாற்றிட வேண்டும்.சார்பு அணியில் பதவிகளை கொடுங்கள். அப்போது அவர்கள் உற்சாகமாக தேர்தல் பணியாற்றுவார்கள் என்றார்.

தொடர்ந்து அமைச்சர் அர.சக்கரபாணி பேசுகையில், கடந்த நாடாளுமன்ற தேர்தலில் திண்டுக்கல் தொகுதியில் கழகம் பெற்ற வாக்குகளைவிட தற்போது நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் 1 லட்சத்துக்கு மேல் வாக்குகள் குறைந்துள்ளது. வாக்குகள் குறைந்ததற்கான காரணம் குறித்து கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் ஆய்வு செய்து அதை நிவர்த்தி செய்யும் பணிகளில் ஈடுபட வேண்டும். அதோடு அடுத்து நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலுக்கான களப்பணிகளையும் தற்போதே தொடங்க வேண்டும் திண்டுக்கல் மாவட்டம் கழகத்தின் கோட்டை என்று நாம் மீண்டும் நிரூபித்திட வேண்டும் என்றார்.

கூட்டத்தில் மாநகராட்சி மேயர் இளமதி, துணை மேயர் ராஜப்பா, தி.மு.க. துணை செயலாளர்கள் நாகராஜன், ராஜாமணி, மார்க்கரட்மேரி, பொருளாளர் சத்தியமூர்த்தி மற்றும் நகர, ஒன்றிய நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன், கழக வர்த்தக அணி இணைச் செயலாளர் ஜெயம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பாஸ்கரன் துணை தலைவர் பொன்ராஜ், அவைத் தலைவர்கள் மோகன், காமாட்சி, துணை செயலாளர்கள் நாகராஜன், ராஜாமணி, மார்க்கெட் மேரி, பிலால் உசேன், மாவட்ட பொருளாளர் சத்தியமூர்த்தி, விஜயன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆண்டிஅம்பலம், திண்டுக்கல் மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், மாநகர செயலாளர் ராஜப்பா உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை ஒவ்வொரு உடன்பிறப்பும் உள்ளன்புடன் கொண்டாடி மகிழ்ந்த நிலையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில் தலைவர் கலைஞர் கட்டிக்காத்த இயக்கமாம் தி.மு.க. வின் பவள விழா ஆண்டு நிறைவினை கழகம் தொடங்கப்பட்ட நாளான செப்டம்பர் 17 அன்று கொண்டாடி மகிழ இருப்பதால் இந்த முக்கால் நூற்றாண்டு அரசியல் வரலாற்றில் தி.மு. கழகம் படைத்த சாதனைகள் கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட மகத்தான திட்டங்கள், திராவிட மாடல் அரசைத் திறம்பட நடத்திவரும் முதலமைச்சர் அவர்களின் மக்கள்நலத் திட்டங்கள் ஆகியவற்றை விளக்கி சுவர் விளம்பரங்கள் எழுதப்படுவதுடன் தமிழ்நாடு முழுவதும் தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள் நடத்தி, மக்களிடம் கழகத்தின் சாதனைகளை எடுத்துக்கூறும் நிகழ்வுகளுடன் கழகக் கொடிக் கம்பங்கள் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டு, அதில் அந்தந்தப் பகுதிகளில் கழகத்திற்காக அல்லும் பகலும் அயராது உழைத்த மூத்த முன்னோடிகளின் கரங்களால் நம் இருவண்ணக் கொடியை ஏற்றிப் பட்டொளி வீசிப் பறந்திடச் செய்திடவும், ஒவ்வொரு ஊரிலும் உள்ள நம் கொள்கைத் தலைவர்களான தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரது சிலைகளை பொலிவுபடுத்தி, மாலையிட்டு மரியாதை செலுத்துவது என்றும், தலைவர் கலைஞர் அவர்கள் உருவாக்கித் தந்த இலட்சிய விழாவான முப்பெரும் விழா, இந்த பவள விழா ஆண்டில், கழகம் தொடங்கப்பட்ட சென்னையில் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் தலைமையில் எழுச்சி மிகுந்த விழாவாகக் கொண்டாடும் இவ்விழாவில் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்படுகிறது.

மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பகுதிச் செயலாளர்கள் அனைத்து சார்பு அணிகளுக்கும் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களை நியமனம் செய்திட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருவான்மியூர் முதல் உத்தண்டி வரை உயர் மட்டச் சாலை அமைத்திட அரசு பரிசீலனை!

கிழக்குக் கடற்கரைச் சாலையில் நடைபெறும் சாலைப் பணிகள்!

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

சென்னை, ஆக.21- கிழக்குக் கடற்கரைச் சாலையில் நடைப்பெற்று வரும் சாலைப் பணிகள் தொடர்பாக, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு நேற்று முன்தினம் (19.8.2024) நேரடியாக களஆய்வு மேற்கொண்டார்.

சென்னை மாநகரின் பிரதான நுழைவாயில் சாலைகளில் ஒன்றான கிழக்கு கடற்கரை சாலையின் போக்குவரத்து நெரிசலினைக் குறைக்கும் வகையில், திருவான்மியூர் முதல் உத்தண்டி வரை உயர்மட்ட சாலை மேம்பாலம் கட்டுவது குறித்து 2024-2025 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில், முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு, அறிவிப்பு வெளியிடப்பட்டது.

திருவான்மியூர் முதல் உத்தண்டி வரையிலான சாலை 15 கிலோ மீட்டர் நீளம் கொண்டது. இச்சாலைப் பகுதியில் 17 போக்குவரத்து சிக்னல்கள் உள்ளன. எனவே, இச்சாலையை கடக்க சுமார் 45 நிமிடங்கள் முதல் 60 நிமிடங்கள் வரை ஆகிறது. இச்சாலையில் தற்பொழுது 69,000 வாகனங்கள் நாளொன்றுக்கு செல்கின்றன. திருவான்மியூர் முதல் உத்தண்டி வரையிலான 15 கிலோ மீட்டர் தூரத்தில், சாலையின் இருபுறத்திலும் 347 சிறுசாலைகள் / தெருக்கள் உள்ளன.

எனவே இச்சாலையை எவ்வளவு அகலப்படுத்தினாலும், அதிகமான வாகனப் போக்குவரத்தின் காரணமாக, போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, திருவான்மியூர் முதல் உத்தண்டி வரை உயர்மட்டச் சாலை அமைப்பதற்கான கருத்துரு தயாரிக்கப்பட்டு, அரசு பரிசீலனை செய்து வருகிறது.

கட்டப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள உயர்மட்ட பாலம் டைடல் பூங்கா சந்திப்பில் துவங்கி எல்பி சாலைச் சந்திப்பு, கொட்டிவாக்கம், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம் அக்கரை வழியாக உத்தண்டியில் முடிவடையும். இப்பகுதி வாழ் பொதுமக்களின் தேவை கருதி, எல்பி சாலைச் சந்திப்பு, திருவான்மியூர் ஆர்டிஓ ஆபீஸ், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம் மற்றும் அக்கரைச் சந்திப்பில் பாலத்தில் ஏறி அல்லது இறங்கிச் செல்லும் வகையில் வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது.

இப்பாலத்தின் மூலம் இப்பகுதியை 20 நிமிடங்களில் கடக்க இயலும். தற்போதைய ஆறு வழிச் சாலை அமைக்க நில எடுப்பு செய்யப்பட்டு வருகிறது. கூடுதல் நில எடுப்பு ஏதும் மேற்கொள்ளாமல், 18 மாதங்களுக்குள் இந்த சாலை மேம்பாலத்தை கட்டி முடிக்க வேண்டும்.

சென்னை மாநகரில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் பொருட்டு, சென்னையில் செயல்படுத்தப்பட்டு வரும் முக்கிய திட்டங்களில் ஒன்றான "கிழக்கு கடற்கரை சாலையை" திருவான்மியூர் முதல் அக்கரை வரை ஆறுவழித் தடமாக அகலப்படுத்தும் பணிகள் குறித்து ஆய்வு செய்தார்கள்.

கிழக்குக் கடற்கரைச் சாலை, சென்னை பெருநகர், திருவான்மியூர், மாமல்லபுரம், புதுச்சேரி, சிதம்பரம், சீர்காழி, நாகப்பட்டினம், திருத்துறைப் பூண்டி, இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி வழியாக, கன்னியாகுமரியுடன் இணைக்கும் முக்கிய சாலையாக (மா.நெ.49) உள்ளது.

மேலும், தகவல் தொழில்நுட்பத் துறையின் அதிவேக வளர்ச்சி மற்றும் பெருகிவரும் அடுக்குமாடி கட்டிடங்களின் எண்ணிக்கை ஆகியவை இவ்வழித்தடத்தில் வாகனப்போக்குவரத்து எண்ணிக்கை மிகவும் அதிகமாகி உள்ளது. இச்சாலையினை ஆறுவழித் தடமாக அகலப்படுத்துவதால் பெரும் வாகன நெரிசல் குறையும்.

மேற்கண்ட பணியானது, கிழக்குக் கடற்கரைச் சாலையில் திருவான்மியூரில் தொடங்கி, அக்கரை வரை, 8.80 கி.மீ. நீளத்திற்கு நடைபெற்று வருகிறது.

இச்சாலையை, திருவான்மியூர் முதல் அக்கரை வரை ஆறுவழித் தடமாக அகலப்படுத்த நில எடுப்புப் பணிக்கு, ரூ.940 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் அரசு வழங்கியுள்ளது என்று தெரிவித்த அமைச்சர்,

திருவான்மியூர், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம் மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய ஆறு கிராமங்களில் நிலஎடுப்புப் பணி 15 பகுதிகளாக பிரிக்கப்பட்டு, இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது எனவும் தெரிவித்தார்.

இச்சாலை விரிவாக்கப் பணியானது, திருவான்மியூர், கொட்டிவாக்கம், பாலவாக்கம் மற்றும் நீலாங்கரை முதல் அக்கரை வரை என 4 கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு கொட்டிவாக்கம், பாலவாக்கம் மற்றும் நீலாங்கரை முதல் அக்கரை வரை 3 கட்டங்களாகப் பணிகள் நடைபெற்று வருகிறது.

கிழக்குக் கடற்கரைச் சாலையை ஆறுவழித் தடமாக அகலப்படுத்துவதற்கு கொட்டிவாக்கம் பகுதியில் ரூ.19 கோடி மதிப்பீட்டிலும், பாலவாக்கம் பகுதியில் ரூ.18 கோடி மதிப்பீட்டிலும், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம் மற்றும் சோழிங்கநல்லூர் பகுதிகளில் ரூ.135 கோடி மதிப்பீட்டிலும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 11.04.2025இல் முடிவுடையும் என்று தெரிவித்தார்.

இப்பணியில் சாலையின் மையத்தில் 1.2 மீட்டர் அகலத்திற்கு மைய தடுப்புச் சுவர், தடுப்புச் சுவரின் இருபுறமும் 11 மீட்டர் அகலத்திற்கு தார் தளம், 1.65 மீட்டர் அகலத்திற்கு பேவர் பிளாக் தளம் மற்றும் 2 மீட்டர் அகலத்திற்கு மழைநீர் வடிக்கால்வாய் மற்றும் நடைபாதை அமைக்கப்பட உள்ளது.

நிலஎடுப்பு செய்த இடங்களில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் முடிவுற்ற இடங்களில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பயன்பாட்டு உபகரணங்களை மாற்றி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

மின்சார உபகரணங்கள் மாற்றி அமைக்கப்பட்டவுடன், சென்னை குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் குடிநீர் குழாய் மற்றும் பாதாள கழிவு நீர் குழாய்கள் பதிக்கும் பணிகள் இருபுறமும் நடைபெறும் என்று தெரிவித்தார்.

இத்திட்டங்களை விரைவாகவும், தரத்துடனும் செயல்படுத்தி முடித்து, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டு வருவதற்கு உரிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் எடுக்குமாறு அறிவுரைகள் வழங்கினார்.

திண்டுக்கல் மாவட்டக் கழகத்தின் செயற்குழு கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர் அமைச்சர் இ.பெரியசாமி சிறப்புரை ஆற்றினார். உடன் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் அர.சக்கரபாணி, கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ. செந்தில்குமார் எம். எல். ஏ ஆகியோர் உள்ளனர்.